**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 17** |
| **Name** | : | **திரு. சரவணன்** |
| **Father's Name** | : | தங்கராஜ் |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **14.07.2022**

**முதல் விசாரணை :**

நான் பழங்காநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பு சோழவந்தானில் குடீயிருந்தேன். தற்போது HDFC வங்கி, சிம்மக்கல் கிளையில் வேலை செய்கிறேன். இதற்கு முன்பு கடந்த 2012 முதல் 2016 ம் ஆண்டு வரை, மதுரை, அண்ணாநகர் FED வங்கியில் வேலை பார்த்து வந்தேன். ஆஜர் எதிரியைத் தெரியும். நான் FED வங்கியில் வேலை பார்த்த போது, நகை அடகு வைக்க வந்திருந்தார். கடந்த 2015 ம் ஆண்டு, ஜீலை மாதம் 31 ம் தேதி, சாயங்காலம் 04.00 மணிக்கு மேல் ஆஜர் எதிரியுடன் முத்துக்குமார் என்பவரும் வந்திருந்தார். அப்போது நான் FED வங்கியில் Cashier cum Appraiser ஆக வேலை பார்த்தேன். அவர் பெயரில் 24 கிராம் எடையுள்ள செயினை அடகு வைத்தார்கள். நகையைக் கொடுத்தவுடன் நான் அதை தங்கமா என்று சரிபார்த்து மேனேஜரிடம் சொல்லிவிட்டு, நகையை வாங்கிக்கொண்டு, பணம் ரூ.40,000/-க்கு மேல் கொடுத்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் செயின் அசாபொ7 இதே போல் தான் இருக்கும். முத்துகுமார் என்பவர் பெயரில் proof கொடுத்தார்கள். முத்துக்குமாரின் டிரைவிங் லைசென்ஸ் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் அசாபொ20

ரசீது எங்கள் வங்கியில் இருந்து கொடுத்தது தான். 12 ம் தேதி ஆகஸ்ட் மாதம், 2015 அன்று போலிசார் வந்து, கொலை செய்து நகையை திருடி வந்துவிட்டதாக சொன்னார்கள். அதற்கு பிறகு, அதற்கான ஆதரமாக வங்கி ஆவணங்களை கொடுத்தேன். 31 ம் தேதி எங்கள் வங்கியில், நான், மேலாளர், செக்யூரிட் மற்றும் ஒரு பணியாளர் இருந்தார். நான் தான் அந்த நகையை பரிசோதித்து பார்த்து பணம் கொடுத்தேன். 12 ம் தேதி போலிசார் வந்த போது எதிரி அடகு வைத்த நகை ரசீது, அவர்கள் வந்து போனதற்கான CCTV கேமிராவின் footage, மற்றும் எங்கள் வங்கியில் வாடிக்கையாளர்கள் வந்து போனதற்கான attendance ஆகியவற்றை வாங்கி சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் **வருகைப்பதிவேடு அதசாஆ.**16 ஆகும். அதில் வாடிக்கையாளர்கள் வந்து போன விபரம் இருக்கும். 31.07.2015 அன்று முத்துக்குமார் என்பவர் 04.20 மணிக்கு வந்து 05.10 மணிக்கு வெளியே போனதாக குறிப்பு உள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் எங்கள் வங்கியில் நகை அடகு வைத்ததற்காக இரசீது ஆகும். **அது அதசாஆ.**17 **ஆகும்.** அதில் எதிரி முத்துக்குமார் என்பவரின் கையெழுத்தும் மேனேஜரின் கையெழுத்தும் உள்ளது. வங்கியின் **பதிவு சான்றிதழ் அதசாஆ.18 ஆகும்.** அசாபொ.21 CD சாட்சியிடம் போட்டு காண்பிக்கப்பட்டது. அதில் ஆஜர் எதிரியும், இறந்த எதிரி முத்துக்குமாரும் வருகை தருவதையும், நகை அடகு வைப்பதையும் சாட்சி அடையாளம் காட்டுகிறார். அசாபொ.22 pendrive வும் சாட்சியிடம் போட்டு காண்பிக்கப்பட்டது. அதிலும் அசாபொ.21 CD யில் இருந்த அதே நிகழ்வுகள் தான் இருந்தது. ஆஜர் எதிரியும், இறந்த எதிரியும், வருகை தந்தது முதல் அடமானம் வைத்து சென்றது வரை சாட்சி அடையாளப்படுத்துகிறார். (எதிரியும், எதிரி தரப்பு வழக்கறிஞர் மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர் எல்லோரும் மேற்படி நிகழ்வுகளை பார்வையிட்டார்கள்.) இறந்த எதிரி முத்துக்குமார் பெயரில் உள்ள நகை அடமானம் வைப்பதற்காக கொடுக்கப்பட்ட CAM (Credit Appraisal Memo ) Gold Report, அதில் மனு, நகை பற்றிய விபரங்கள், undertaking details 2, எதிரி முத்துக்குமார் கையெழுத்து போட்டுக்கொடுத்த ஓட்டுநர் உரிமம் நகல் ஆகியவை அடங்கிய

மொத்தம் 8 தாள்கள் அடங்கியது- இது **அதசாஆ.19 ஆகும்.** அதில் வங்கி மேலாளர் பானுமதி அவர்களின் கையெழுத்து உள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனது கல்வி தகுதி MBA ஆகும். இளநிலை படிப்பு BCA ஆகும். நான் பணிபுரிந்த FED வங்கிக்கு அருகில் உள்ள இடம் என்ன என்றால் எங்கள் வங்கிக்கு எதிரே அப்போது Coffeeday இருந்தது. வங்கியின் வலது பக்கத்தில் பப்பீஸ் பேக்கரி இருந்தது. எங்கள் வங்கியின் அடுத்த கதவு மணப்புரம் கோல்டு லோன் வங்கி இருந்தது. எங்கள் வங்கி இருந்த Complex பெயர் தற்போது ஞாபகம் இல்லை. அந்த complex ல் மொத்த எத்தனை தளங்கள் இருந்தது என்றால் நாங்கள் இருந்தது முதல் தளம். அதன் பிறகு 2 வது தளம். அதற்கு மேல் டெரஸ் இருந்தது. தரை தளத்தில், கன்சல்டிங் சர்வீஸ் ஒன்று இருந்தது. அதற்கு பக்கத்தில் நகை கடை ஒன்று இருந்தது. அந்த நகை கடை கட்டிடத்தின் உரிமையளாருடையது. எங்கள் FED வங்கிக்கு அருகில் வேறு என்ன கடைகள் இருந்தது என்று தற்போது ஞாபகம் இல்லை. 7,8 வருடங்கள் ஆகிவிட்டது. எங்கள் வங்கி 24 x7 சர்வைலன்ஸ் CCTV உள்ள வங்கி ஆகும். எங்கள் வங்கி இருந்த கட்டிடத்தில் லிப்ட் வசதி இல்லை. எங்கள் வங்கி இருந்த கட்டிடத்தில் படி ஏறும் இடத்தில் CCTV கேமிரா இருந்ததா என்று ஞாபகம் இல்லை. நான் வேலை பார்த்த FED வங்கியானது RBI வங்கியின் அட்டவணைபடுத்தப்பட்ட வங்கி ஆகும். நான் IBPS பரிச்சை எழுதி தேர்ச்சி பெற்று தான் அந்த வங்கியில் வேலைக்கு சேர்ந்தேன் என்றால் நான் அந்த பரிச்சை எழுதவில்லை. FED வங்கியனாது NBFS (Non banking Financial Services) வங்கியாகும். அதனால் அங்கு வேலைக்கு சேர IBPS பரிச்சை தேர்ச்சி பெற அவசியம் இல்லை. நான் அப்ரைசர் கோர்ஸ் முடிக்கவில்லை. வங்கியில் பயிற்சி தான் எடுத்துள்ளேன். நான் எந்த காலகட்டத்தில் டிரையினிங் பெற்றேன் என்றால் 2012 ம் வருடம், 2,3 நாட்கள் பயிற்சி கொடுத்தார்கள். தேதி ஞாபகம் இல்லை. மொத்தம் எங்கள்

வங்கியில் 2 நகை மதிப்பீட்டார்கள் உள்ளார்கள். மற்றொரு நகை மதிப்பீட்டளர் பெயர் தற்போது ஞாபகம் இல்லை. FED BANK ஆக இருந்தாலும் மற்ற வங்கியாக இருந்தாலும் RBI வங்கியின் சட்டத்திற்கு மீறி செயல்பட இயலாது. பொதுவாக Business hours ல் தான் business நடக்கும். Official hours என்பது வங்கியை திறந்து பூட்டும் நேரம் என்றால் இரண்டும் ஒன்றுதான். Office Hours என்பவது வேறு, Business Hours வேறு என்றால் சரியல்ல. நான் பணிபுரிந்த வங்கியில் அலுவலக வேலை நேரம் என்று குறிப்பிட்டு போர்டு இருக்கும். வாடிக்கையாளர் இரவு 07.00 மணிக்கு வந்தால் வேலை நடக்குமா என்றால் மேலாளரிடம் சொல்வோம். நான் பணிபுரிந்த FED வங்கியின் அலுவலக நேரம் மற்றும் பணி நேரம் என்ன என்றால் காலை 09.30 மணியிலிருந்து மாலை 06.00, 06.30 மணி வரை நடக்கும். அது அலுவல் நேரமாகும். Business Hours என்பது Approval கொடுத்தால் வேலை செய்வோம். எங்கள் வங்கியானது Federal வங்கியின் sister வங்கியாகும். நாங்கள் கொடுத்துள்ள ஆவணங்களில் FED வங்கியானது Federal வங்கியின் sister வங்கி என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அசா17 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. Federal Bank என்பது வேறு. FED Bank என்பது வேறு. FED வங்கியில் நகையை அடமானம் மட்டும் தான் வைக்கமுடியும். எங்கள் வங்கிக்கு Business Hours ல் மாலை 06.00 மணி வரை வேலை செய்வோம். officer Hours என்பது அலுவலக நேரம் ஆகும். Business hours என்பது வாடிக்கையாளர்கள் வரும் நேரம். Business Hours ல் தான் வணிகம் நடக்கும். சம்பவம் நடந்த காலத்தில் எங்கள் வங்கியின் பணி நேரம் காலை 10.00 முதல் மாலை 05.00 வரை என்றால் ஞாபகம் இல்லை. 06.30 வரை என்பது தான் எனக்கு ஞாபகம். Business Hours என்பது காலை 10.00 மணி முதல் மாலை 03.00 வரை என்றால் சரியல்ல. மதிய உணவு இடைவெளி நேரம் என்பது மதியம் 02.00 மணி முதல் 02.30 மணி என்றால் ஞாபகம் இல்லை. RBI Norms பிரகாரம் Business Hours தாண்டி வணிகம் செய்யக்கூடாது. எங்கள் Networking System எதுவும் எங்கள் கட்டுப்பாட்டில் கிடையாது. எங்கள் வங்கிக்கு

தலைமையகம் எது என்று எனக்குத் தெரியாது. Business Hours முடிந்துவிட்டால் தானாகவே server lock ஆகிவிடும் என்றால் ஆகாது. Server எப்போது Off ஆகும் என்றால் 07.00 மணிக்கு தான் lock ஆகும். நாங்கள் 06.30 மணிக்கு கிளம்பிய பிறகு server lock ஆகும் என்றால் சரிதான். அது எங்கள் கையில் கிடையாது. எங்கள் FED வங்கிக்கு USER ID. Password எல்லாம் தலைமையகத்தில் தான் இருக்கும். அவர்கள் close செய்து விட்டால் அதன் பின்பு நாங்கள் பயன்படுத்தமுடியாது. 03.00 மணிக்கு Automatic ஆகவே Server lock ஆகி விடும் என்றும் நான் சொல்வது போல் எதிரி வந்ததாகவும், வணிகம் செய்ததாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த எங்கள் வங்கி ஆவணங்களில் எதிரி விஸ்வநாதனின் கையெழுத்து இல்லை. எங்கள் CCTV கேமிராவை நெட்ஒர்க் டீம் தான் கையாள்கிறார்கள். அது எங்கள் வங்கி மேலாளருக்கு தெரியும். கேமிரா பழுதுஆனாலும் வேறு பிரச்சனை எதுவும் வந்தாலும் அந்த நேட்ஒர்க் டீம் தான் வரவேண்டும். போலிசார் என்னை எந்த எந்த தேதிகளில் விசாரணை செய்தார்கள் என்றால் 12.08.2015 ம் தேதி என்னை விசாரணை செய்தார்கள். எத்தனை மணிக்கு விசாரணை செய்தார்கள். அன்று முழு நாளும் இந்த வழக்கிற்கு ஒத்துழைப்பு கொடுத்தோம். நான் சொன்ன தேதியில் போலிசாருடன் யார் யார் வந்தார்கள் என்றால் எஹமஹை விஸ்வநாதனும், இறந்த எதிரி முத்துக்குமாரும் வந்தார்கள். சைபர் கிரைமில் இருந்து போலிசாரோ, சீருடை அணியாத போலிசாரோ இருந்தார்களா என்று ஞாபகம் இல்லை. 12.08.2015 அன்று போலிசார் ஆய்வு நடத்தியதும், அப்போது எதிரிகள் வருகை தந்ததும் எங்கள் வங்கி CCTV Footage ல் பதிவாகியிருக்கும். அந்த footage எதுவும் போலிசாரிடம் கொடுத்தோமா என்று தெரியாது. போலிசார் வந்து எங்களிடம் ஆவணங்களை கைப்பற்றிய Footage யும் நாங்கள் பதிவு செய்து கொடுத்திருந்தால், எதிரிகள் போலிசாருடன் வந்தது பற்றி தெரியவரும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக காவல்துறையினர் எத்தனை முறை எங்கள் வங்கிக்கு வந்திருந்தார்கள் என்றால் 2 முறை வந்துள்ளார்கள். 12.08.2015 க்கு முன்பு

போலிசார் எதிரிகள் நகை வைத்திருக்கிறார்களா என்று விசாரிக்க எதிரிகள் நகை அடகு வைத்த நாளில் இருந்து 2,3 நாளில் வந்தார்கள். 12.08.2015 காலையில் போலிசார் வந்த போது எத்தனை மணி இருக்கும் என்றால் ஞாபகம் இல்லை. மதியத்திற்கு மேல் இருக்கும். 12.08.2015 அன்று போலிசாருடன் எதிரி விஸ்வநாதனும், முத்துக்குமாரும் வந்த போது பேண்ட், ஷார்ட் போட்டிருந்தார்கள். CCTV Footage ஐ அதை control செய்வதற்கு hard disc க்கு உண்டு என்றும், அதை நிர்ணயிப்பதற்கும் CCTV சர்வைலன்ஸ் டீம் தான் வர வேண்டும் என்றால் எனக்குத் தெரியாது. 12.08.2015 அன்று CCTV சர்வைலன்ஸ் டீம் யாரும் வரவில்லை. எங்கள் வங்கி CCTV footage மேனேஜர் கன்ட்ரோலில் தான் இருக்கும். Private vendar தான் எங்கள் வங்கி CCTV கேமிராவை நிறுவியவர்கள். CCTV camera வில் எதுவும் குறை,, நிறைகள் இருந்தால் அதை சரிசெய்ய பிரைவேட் வெண்டார் தான் வர வேண்டும். அவர் பெயர் ஞாபகம் இல்லை. எங்கள் வங்கியில் வந்து சோதனை செய்வதற்கு போலிசார் வேண்டுகோள் கடிதம் எதுவும் கொடுத்தார்களா என்றால் கொடுத்திருப்பார்கள். அந்த கடிதம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யதார்களா என்று தெரியாது. மேலாளரிடம் தான் கேட்கவேண்டும். போலிசார் எங்கள் வங்கிக்கு வந்து விசாரணை செய்து, நகையை வாங்கிசென்றார்கள். அந்த நகைக்கு யார் பணம் கட்டினார்கள் என்றால் இது போன்ற விஷயங்களை கையாள்வதற்கு வங்கியின் சட்டக்குழு தான் பார்க்கும். எனக்கு இது பற்றி தெரியாது. 12.08.2015 அன்று வங்கியின் சட்டக்குழு வந்திருந்தார்களா என்று ஞாபகம் இல்லை. எங்கள் வங்கியின் மேலாளார் பானுமதியும், அவரின் மேலாளர் ஆரோக்கியஜேசுதாஸ் என்பவரும் இருந்தார்கள். மொத்தம் எங்கள் வங்கியில் எத்தனை அறைகள் இருந்தது என்றால் 2 அறைகள் உள்ளது. cashier cabin ஒன்று உள்ளது. கான்கிரிட் ரூம் 2 உள்ளது. Cashier என்பவர் அவரது cabin ல் தான் இருக்க வேண்டும் என்றால் நான் அப்போது cashier மற்றும் நகை மதிப்பீட்டாளராக இருந்ததால் வெளியில் இருந்து வந்த வாடிக்கையாளரின் விவரங்களை கணினியில் பதிவு செய்ய வந்தேன். சம்பவத்தன்று நான் தான் நகையை

மதிப்பீடு செய்தேன். அந்த நகையில் dust தவிர வேறு எதுவும் இல்லை. எங்கள் FED வங்கியில் மொத்தம் 3 கேமிராக்கள் உள்ளது. வெளியில் ஒரு கேமிரா இருந்ததா என்று ஞாபகம் இல்லை. Hard disc ல் இருந்து நேரடியாக CD க்கு பதிவேற்றம் செய்ய இயலாது என்றால் பண்ண முடியும். DVR ல் இருந்து நேரடியாக CD க்கு காப்பிசெய்ய முடியாது. இந்த வழக்கில் உள்ள CD க்கும் இதே நடைமுறைதான். 12.08.2015 அன்று DVR ல் இருந்து CD க்கு யார் convert செய்து போலிசாரிடம் கொடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. மேனேஜருக்குத்தான் தெரியும். எங்கள் வங்கியில் இருந்த Hard disc ன் brand என்ன என்று தெரியாது. அந்த hard disc எத்தனை TB (Tera Byte) என்று தெரியாது. 24 மணி நேரமும் ஒரு கேமிரா இயங்கினால் எவ்வளவு TB ஆகும் என்று எனக்குத் தெரியாது. எங்கள் வங்கி Hard disc எத்தனை நாட்களுக்கு ஒரு முறை Reset ஆகும் என்று தெரியாது. DVR, Computer போன்றவற்றை control செய்ய Switch ஆனது எங்கள் அலுவலகத்தில் மேனேஜர் கேபினின் பக்கத்தில் இருக்கும். எனக்கு பக்கத்தில் இருந்தது தான் மேனேஜர் கேபின் என்றால் இல்லை. என் அருகில் இருந்தது ஏரியா மேனேஜர் ஆகும். எத்தனை port உள்ள switch என்று எனக்குத் தெரியாது. எங்கள் வங்கியின் network coordinator யார் என்று எனக்குத் தெரியாது. சம்பவ சமயத்தில் நான் அந்த வங்கியில் தான் வேலை பார்த்தேன் என்பதற்காக வருகைப்பதிவேட்டினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. எங்கள் வங்கிக்கு பணியாளர்களுக்கான வருகைப்பதிவேடு தனியாக உள்ளது. உண்மையில் எதிரிகள் வந்தார்கள் என்றும், நகையை அடகு வைத்தார்கள் என்பதற்கும், உண்மையில் நான் அன்று வங்கியில் இருந்தேன் என்பதற்கு எங்கள் வங்கி பணியாளர்களின் வருகை பதிவேட்டினை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எங்கள் வங்கிக்கு வரும் internet இணைப்பு airtel கம்பெனியுடையது. அது பைபர் நெட்ஒர்க் ஆ அல்லது ஆப்டிக்கல் நெட்ஒர்க்கா என்று ஞாபகம் இல்லை. சம்பவ சயமத்தில் நான் வேலை பார்க்கவில்லை என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும்

சரியல்ல. உண்மையிலேயே அன்றைய தினம் நான் பணியில் இருந்திருந்தால், எனது அடையாள அட்டை, வருகை பதிவேடு மற்றும் அன்றைய தினம் நான் வேலை பார்த்த CCTV footage யும் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. பொதுவாக DISC ல் Copy செய்யும் போது மோசடி செய்ய முடியும் என்றால் சரியல்ல. இந்த CD யில் அவ்வாறு எதுவும் செய்யவில்லை. ஒரு instrument ல் இருந்து CD க்கு copy செய்யும்போது எதைவேண்டுமானாலும் சேர்த்துக்கொள்ளலாம் என்றால் அதற்கு வாய்ப்பு உள்ளது. உண்மையிலேயே எதிரிகள் வந்தார்களா போனார்களா என்று எங்கள் வங்கியில் உள்ள அனைத்து கேமிராக்களும் பார்த்தால்தான் தெரியும் என்றால் இந்த ஒரு கேமிராவே போதும். மற்ற கேமிராகளை பார்த்தாலும் தெரியும். DVR ஐ OPEN செய்வதற்கும் Close செய்வதற்கும் User ID. Password வேண்டும் என்றால் சரிதான். அதை network team தான் control செய்வார்கள் என்றால் மேலாளாருக்கும் அந்த உரிமை உண்டு. Networking Teamன் support இல்லாமல் எங்கள் வங்கியின் கணினிகள் மற்றும் CCTV Camera வை கையாள மேலாளருக்கு முடியுமா என்றால் முடியும். மேலாளருக்கு என்ன நேரத்தில் என்ன நடந்துள்ளது என்று பார்ப்பதற்கு உரிமம் உண்டு. Network Team இடம் CCTV கேமிராவை பார்ப்பதற்கு வேண்டுகோள் வைக்க வேண்டிய அவசியம் இல்லை. எங்கள் வங்கி சம்பந்தப்பட்ட ஆவணங்களை போலிசரிடம் கொடுக்கும்போது, எங்கள் Network Team இடமும், எங்கள் மேல் அதிகாரியிடமும் முறையாக உத்தரவு பெறவேண்டும் என்றால் permission letter கொடுத்து வாங்குவார்கள். அந்த request letter ஆனது லெட்டராகவும் இருக்கலாம். மெயிலாகவும் இருக்கலாம். போன் மூலமும் கேட்கலாம். இது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்று ஞாபகம் இல்லை. உண்மையிலேயே நான் அந்த வங்கியில் பணிசெய்யவில்லை என்றாலும், அதனால் தான் எங்கள் வங்கியின் Networking system பற்றி தெரியவில்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் அந்த வங்கியில் பணிபுரிந்து இருந்தால், எங்கள்

வங்கியின் அலுவலக நேரம், வணிக நேரம் பற்றி தெரிந்திருக்கும் என்றாலும் சரியல்ல. எங்கள் வங்கிக்கு limitation எதுவும் கொடுக்கவில்லை. இந்த வழகைகு சம்பந்தமாக காவல்துறையினர் என்னை விசாரிக்கும்போது, வழக்கின் ஆவணங்களை கொடுக்கும் CCTV Footage யும் பதிவாகியிருக்க வாய்ப்புள்ளது. உண்மையிலேயே போலிசார் என்னை விசாரித்து இருந்தாலும், ஆவணங்களை கைப்பற்றி இருந்தாலும் இந்த நிகழ்வுகளும் CCTV footage ல் பதிவாகி இருக்கும் என்றும் அந்த பதிவுகளையும் இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் நகைக்கு உரிய கடன் தொகையை யார் செலுத்தினார்கள் என்றால் இது வங்கி மேலாளருக்குத்தான் தெரியும். இது சம்பந்தமாக கடன் தொகை உள்ளது என்றும், வாரா கடன் என்றும், இது தொடர்பாக வங்கியில் நகை அடகு வைத்தவருக்கு நோட்டீஸ் அனுப்பினால், அடகு வைக்கப்பட்ட நகை எங்கள் வங்கியில் தான் இருக்கும் என்றால் திருட்டு நகை எதுவும் அடகு வைத்திருந்தால் அதை வசூல் செய்வதற்கென்று தனி குழு உள்ளது. அடகு வைக்கப்பட்ட நகை யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கும் என்றால் லாக்கரில் வைக்கப்பட்ட நகைக்கு, லாக்கரின் சாவி ஒன்று என்னிடமும், மற்றொரு சாவி மேனேஜரிடமும் இருக்கும். என்னுடைய ஒப்புதல் இல்லாமல் மேனேஜர் எடுக்க முடியாது. அன்றைய தேதியில் நகை எடுக்க மேனேஜர் என்னிடம் ஒப்புதல் வாங்கினார். இரண்டு பேரும் சேர்ந்து தான் நகையை எடுத்தோம். அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. லாக்கர் ரூம் வங்கியில் 2 வது அறையில் உள்ளது. 2 வது அறையில் லாக்கரில் நகையை நான் வைத்ததும், எடுத்ததும் CCTV கேமிராவில் பதிவாகியிருக்கும். உண்மையில் அந்த CCTV Footage யும் நான் தாக்கல் செய்தால் தான் உண்மையில் நகை வைக்கப்பட்டதா திரும்ப எடுக்கப்பட்டதா என்று தெரியவரும் என்றால் சரியல்ல. எதிரி விஸ்வநாதனையும், முத்துக்குமாரையும், நீதிமன்ற காவலில் இருந்து போலிஸ் காவலில் 12.08.2015 அன்று எடுத்தவர்களை எங்கள் வங்கிக்கு நேரடியாக கூட்டிக்கொண்டு வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அவ்வாறு கூட்டிவந்த போலிசார் தான் நாங்கள் எவ்வாறு

செய்யவேண்டும் என்றும், எதிரிகள் எவ்வாறு செய்யவேண்டும் என்றும் நாடகம் நடத்தினார்கள் என்றால் சரியல்ல. CCTV Camera வின் Footage பதிவுகளின் தேதி, நேரம் உட்பட அனைத்தும் மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாடிக்கையாளரின் வருகைப்பதிவேட்டின் முழுவதையும் தாக்கல் செய்யாமல் குறிப்பிட்ட ஒரு பக்கத்தை மட்டும் உருவாக்கி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வாடிக்கையாளர் வருகைபதிவேட்டில் எங்கள் வங்கியின் பெயர் எங்கேயும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அதசாஆ.16 ல் வாடிக்கையாளர்கள் பெயர்கள் உள்ள பகுதியில் தேதி மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒளிநகல் எடுக்கும்போது, அது சரியாக பதிவாகாததால் வங்கியின் முத்திரை இடப்பட்டுள்ளது. அசல் வருகைப்பதிவேடு தாக்கல் செய்யப்படவில்லை. உண்மையிலேயே அசல் வருகைபப்பதிவேட்டினை தாக்கல் செய்தால் தான் அதசாஆ.16 உண்மை என்று தெரியவரும் என்றால் சரியல்ல. எனது நகை மதிப்பீடு செய்யும் சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. நான் நகைமதிப்பீட்டாளரே இல்லை என்பதால் தான் சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக நகையை வாங்கினேன் என்றும், நகையை மதிப்பீடு செய்தேன் என்றும் போலிசார் சொல்லிக்கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் சொன்ன அனைத்தும், போலிசார் எனக்கு சொல்லிக்கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் எனக்குத் தெரியாது. ஆனால் எங்கள் வங்கிக்கு வந்தார்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 18** |
| **Name** | : | திரு. பிரகாஷ் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **14.07.2022**

<u>முதல் விசாரணை :</u>

நான் மதுரை மேலமாசிவீதியில் குடியிருக்கிறேன். கோரிபாளையத்தில் உள்ள லெக்ரோ ஆர்க்கேட் ஜவுளி கடையில் சூப்ரவைசராக வேலை பார்த்து வந்தேன். எனக்கு வயதாகிவிட்ட காரணத்தினால் ஆஜர் எதிரியை ஞாபகம் இல்லை. போலிசார் வந்து விசாரணை செய்தார்கள். பில் எங்கள் கடையுடையது தானா என்று கேட்டார்கள். கடந்த 2015 ம் வருடம் போலிசார் வந்து எங்கள் கடையில் துணிஎடுத்ததற்கான பில்லை காண்பித்து எங்கள் கடையுடையது தானா என்று கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் அசாபொ.24 எங்கள் கடையின் பில் தான். அந்த பில்லில் 31.07.2015 என்று தேதிபோட்டு, பில் எண். 2118 ஆகும். Tshirt 2, ஜீன்ஸ் பேண்ட்2, எடுத்ததாகவும் பணம் ரூ. 2015/- என குறிப்பிடப்பட்டுள்ளது. திருடி, மார்டர் செய்துவிட்டு வந்து துணி எடுத்துள்ளார்கள் என்று சொன்னார்கள். வேறு எதுவும் தெரியவில்லை . போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

ஒரு பில்லை வைத்து இவர்தான் வாங்கிச்சென்றார் என்று அடையாளம் காட்ட முடியாது. போலிசார் எங்கள் கடைக்கு வந்தபோது, என்ன நேரம் என்று தெரியாது. லெக்ரோ ஆர்க்கேட் என்பது மதுரையில் மிகவும் பிரபலமான துணிக்கடை ஆகும். அது போல் எங்கள் கடையில் விதவிதமான துணிகள் இருக்கும். எங்கள் கடை பெரிய கடை என்பதால் AC. Camera போன்ற வசதிகள் இருக்கும் என்றால் இல்லை. போலிசார் எங்கள் கடையின் பில்லை என்னிடம் காட்டவில்லை என்றால் சரிதான். மேனேஜரிடம் தான் காட்டினார்கள். போலிசார் வந்த போது நான் கடையில் இருந்தேன். கடையின் தரையில் தான் இருந்தேன். எங்கள் கடைக்கு போலிசார் மட்டும் தான் வந்தார்கள்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை